MR. CHAIRMAN : Is the hon. Member repeating the same doubt? Supplementaries should be short.

THIRU M. RAJAH IYER : May I know the names of the persons who came down here and whether there is a background of their having served in this State and having a grouse against the Department, Sir?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய விவரங்கள் தெரியவில்லை.

Seminar on Re-organisation of Rural Development Administration

*244 Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any Seminar was conducted at Kodaikanal on the re-organisation of rural development administration;

(b) if so, the persons who participated in that Seminar; and

(c) the steps taken thereon by the Government?

ஊராட்சி வளர்ச்சி நிர்வாக சீரமைப்பு கருத்தரங்கு

திரு. எல். பலராமன் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) ஊராட்சி வளர்ச்சி நிர்வாக சீரமைப்பு சம்பந்தமாக கொடைக்கானலில் கருத்தரங்கு நடத்தப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதில் யார் யார் கலந்து கொண்டனர்?

(உ) அதன்பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அக் கருத்தரங்கில் கலந்து கொண்டோர் பட்டியல் @ பேரவை முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

(உ) அங்கு எடுக்கப்பட்ட பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, அவர்கள் அரசுக்கு என்னென்ன சிபாரிசுகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை அவைக்கு அமைச்சர் அவர்கள் கூற முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

@ 225–227-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1972 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசுக்கல்ல. நானே அதற்குத் தலைமை தாங்கி, அந்தக் கூட்டத்தை நடத்தினேன். அது ஒரு கருத்தரங்கு என்ற அளவுக்குப் பல கருத்துக்களை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு பிரச்னைகள்—ஊராட்சி ஒன்றியத்தின் நிர்வாகம், அதனுடைய நிதி நிலைமையை எப்படி உயர்த்துவது, நிர்வாக அதிகாரிகள், மற்றைய தன்மைகளில் எல்லாம் பல்வேறு கருத்துக்கள் ஆராயப்பட்டன. ஆராயப்பட்ட கருத்துக்கள் இப்போது அந்தத் துறையால் பரிசீலிக் கப்பட்டு வருகின்றன. அதன்மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கும் போது, அதுபற்றிய நிலைமைகள் இந்த அவைக்கு அறிவிக்கப்படும்.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இது ஏதோ ஒரு சிலருக்கு மட்டும் இந்த வாய்ப்புக்களை அளித்திருக்கிறது. மற்றப் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுடைய அபிப்பிராயங்களையும் அரசு இந்த அறிக்கையின் மேல் கேட்டு அது குறித்து பரிசீலிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது மாவட்டத்திற்கு இரண்டு ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும், இரண்டு ஆணையாளர்களும் என்ற அளவுக்கு அழைக் கப்பட்டது. ஏனென்றால் ஒரு சிறிய அளவில் இருந்தால்தான், கருத் தரங்குக்குப் பயன்படும். ஆகையால் இந்த அளவிலே அவர்கள் அழைக்கப்பட்டார்கள். எல்லா மாவட்டத்திலிருந்தும், மாவட்டத் திற்கு இரண்டு ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும், இரண்டு ஆணை யாளர்களும் என்ற அளவுக்கு வரவழைக்கப்பட்டார்கள். அந்தக் கருத்துக்கள் பல எடுத்துச்சொல்லப்பட்டிருக்கின்றன. அது பற்றிய நடவடிக்கைகள் எடுக்கும்போது, மற்றவர்களுடைய கருத்துக்களை அறிய வாய்ப்பு ஏற்படும்.

திரு. வி. வெங்கா : தலைவர் அவர்களே, இது போன்ற சீர்திருத் தங்கள் செய்கின்ற நிலையில், மாநில அளவில் ஒன்றியங்கள் அமைப்பு இருக்கின்றது. அதனுடைய கருத்தும் கேட்டு அறியப்படுமா என்று விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதனுடைய கருத்தையும் அறிவிக்கலாம். அந்தக் கருத்தும் இந்தத் துறையில் ஆராயப்படும்.